ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

05.08.2019 / 0830 – 1030

හින්දු ශිෂ්ටාචාරය I
இந்து நாகரிகம் I
Hindu Civilization I

46 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள் :**

- **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி (×)** இடுவதன் மூலம் காட்டுக.

**1.** காலத்தால் முந்திய வேதப்பகுதி எது?
(1) பிராமணங்கள் (2) சங்கிதைகள் (3) ஆரணியகங்கள்
(4) உபநிடதங்கள் (5) வேதாங்கங்கள்

**2.** நால்வகை வருணக் கட்டமைப்பின் தொடக்கத்தைச் சுட்டும் இருக்கு வேதப் பாடலைக் கொண்டது
(1) முனிசூக்தம் (2) வருண சூக்தம் (3) நாஸதீய சூக்தம்
(4) பிரம்மச்சாரிய சூக்தம் (5) புருஷ சூக்தம்

**3.** சைவசித்தாந்த சிந்தனைகளோடு தொடர்புடைய உபநிடதம்
(1) பிருகதாரணியக உபநிடதம் (2) கடோபநிடதம் (3) முண்டக உபநிடதம்
(4) சுவேதாஸ்வதர உபநிடதம் (5) சாந்தோக்கிய உபநிடதம்

**4.** இருக்கு வேதம் போற்றும் தெய்வங்களின் வரிசையில் விண்ணைச் சார்ந்த தெய்வங்களின் பெயர்கள் அடங்கிய தொகுதி
(1) மித்திரன், பிருகஸ்பதி, சரஸ்வதி (2) வருணன், ஆதித்தியன், விஷ்ணு
(3) பிருகஸ்பதி, அக்கினி, மித்திரன் (4) இந்திரன், உருத்திரன், சோமன்
(5) வாயு, பர்ஜன்யன், பிருகஸ்பதி

**5.** இருக்கு வேதப் பாடல்களோடு தொடர்புடைய ரிஷிகளுள் மூவரின் பெயர்கள் அடங்கிய தொகுதி
(1) அத்திரி, வசிட்டர், வியாசர் (2) வாமதேவர், அத்திரி, சோமசம்பு
(3) கிருத்ஸமதர், வால்மீகி, வாமதேவர் (4) விசுவாமித்திரர், வாமதேவர், பரத்துவாசர்
(5) கிருத்ஸமதர், உக்கிரசேனர், வாத்ஸ்யாயனர்

**6.** 'வைதிக நெறி' என்பதன் பொருள் யாது?
(1) புராணங்கள் போற்றும் தெய்வநெறி
(2) உபநிடதங்கள் கூறும் தத்துவ நெறி
(3) பிரம்மசூத்திரம் கூறும் வாழ்வியல் நெறி
(4) வேதங்களை அடிப்படையாகக் கொண்ட சமய நெறி
(5) இதிகாசங்களை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கை நெறி

**7.** பின்வரும் எக்காலப்பகுதியில் சிந்துநதி பாயும் பகுதி புதைபொருள் ஆய்வாளர்களால் அகழ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்டது?
(1) 1850 - 1900 (2) 1900 - 1920 (3) 1910 - 1925
(4) 1922 - 1930 (5) 1930 - 1950

**8.** சிந்துவெளி நாகரிக நகரங்களில் ஒன்றாகிய ஹரப்பா தற்போது அமைந்துள்ள இடம் எது?
(1) ஒரிசா மாநிலம் (2) மேற்குப் பஞ்சாப் மாநிலம் (3) ஹரியானா மாநிலம்
(4) மகாராஷ்டிரா மாநிலம் (5) ஆந்திரப் பிரதேசம்

**9.** முத்தி நிலையின் நான்கு முக்கிய பிரிவுகளை உள்ளடக்கிய தொகுதியைத் தெரிவுசெய்க.
(1) கர்மம், பக்தி, யோகம், ஞானம் (2) சரியை, கிரியை, யோகம், ஞானம்
(3) கல்பம், சிட்சை, நிருத்தம், வியாகரணம் (4) சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம்
(5) கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம்

**10.** ‘இந்துசமயக் கலைக்களஞ்சியம்’ எனப் போற்றப்படுவது,
(1) வேதங்களாகும். (2) ஆகமங்களாகும். (3) இதிகாசங்களாகும்.
(4) உபநிடதங்களாகும். (5) ஸ்மிருதிகளாகும்.

**11.** புராணங்கள் ‘தென்னாட்டுக் கருவூலம்’ எனப் போற்றப்படுவதற்கான காரணம் யாது?
(1) கோயில், நடனம், சிற்பம், ஓவியக்கலை ஆகியவற்றில் ஏற்படுத்திய செல்வாக்கு
(2) யாகக் கிரியைகளில் ஏற்படுத்திய செல்வாக்கு
(3) வானசாஸ்திரத்தில் ஏற்படுத்திய செல்வாக்கு
(4) இசைக்கலையில் ஏற்படுத்திய செல்வாக்கு
(5) நதிகளைப் போற்றும் சிறப்பு

**12.** “மாயோன் மேய காடுறை உலகமும்...” என்ற வரிகள் மூலம் திருமாலைப் போற்றும் சங்க இலக்கியம்
(1) அகநானூறு (2) பரிபாடல் (3) திருமுருகாற்றுப்படை
(4) தொல்காப்பியம் (5) பதிற்றுப்பத்து

**13.** திருமுருகாற்றுப்படை என்ற இலக்கியத்தின் ஆசிரியர் யார்?
(1) கபிலர் (2) பரணர் (3) தொல்காப்பியர்
(4) பரத்துவாசர் (5) நக்கீரர்

**14.** மேல்வருவனவற்றுள் காரைக்காலம்மையாரின் பக்தியை வெளிப்படுத்தும் பாடல் எது?
(1) “ஏழிசையாய் இசைப்பயனாய்...”
(2) “காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி...”
(3) “பண்ணும் பதமேழும் பலவோசைத் தமிழவையும்...”
(4) “குனித்தபுருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்...”
(5) “பிறவாமை வேண்டும் பிறப்புண்டேல் நின் திருவடி மறவாமை வேண்டும்...”

**15.** சைவப் பணியில் சிறந்து விளங்கிய மகேந்திரவர்மன் பற்றிக் கூறும் கல்வெட்டு
(1) திருச்சி மண்ணச்சநல்லூர் கல்வெட்டு
(2) திருச்சிராப்பள்ளி குகைக்கோயில் கல்வெட்டு
(3) காஞ்சிபுரம் உத்தரமேரூர் கல்வெட்டு
(4) நாகையூர்க் கல்வெட்டு
(5) செங்கல்பட்டு மாவட்ட திருமுக்கூடல் கல்வெட்டு

**16.** இழந்த தனது கண்பார்வையை சிவனருளால் மீளப்பெற்ற நாயனார்
(1) திருஞானசம்பந்தர் (2) சுந்தரமூர்த்தி நாயனார் (3) திருநாவுக்கரசர்
(4) இளையான்குடிமாறனார் (5) மாணிக்கவாசகர்

**17.** கொடிக்கவி என்பது,
(1) நான்கு வெண்பாக்களால் ஆனது.
(2) ஆறு திருவிருத்தங்களால் ஆனது.
(3) பதின்மூன்று வெண்பாக்களால் ஆனது.
(4) ஐம்பத்து மூன்று வெண்பாக்களைக் கொண்டது.
(5) நூறு விருத்தப்பாக்களைக் கொண்டது.

**18.** 'சைவ சிந்தாந்த வழியில் நிற்பவன்' (சைவசித்தாந்த மார்க்க:) எனக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்ட பல்லவ மன்னன் யார்?
(1) ஸ்கந்தவர்மன் (2) சிம்மவிஷ்ணு (3) மகேந்திரவர்மன்
(4) நந்திவர்மன் (5) இராஜசிம்மன்

**19.** கருடபுராணம் என்ன விடயம் பற்றிச் சிறப்பாகக் குறிப்பிடுகிறது?
(1) சூரன்போர் மூலம் ஆணவத்தை அழித்தல் (2) பாவச் செயல்களும் பிராயச் சித்தமும்
(3) யமசங்காரம் மூலம் பக்தியின் சிறப்பு (4) தலம், தீர்த்தம் ஆகியன
(5) தெய்வீக வரலாற்றுக் கதைகள்

**20.** சங்க காலத்தில் மக்களிடையே சிறப்புற்று விளங்கிய நடுகல் குறித்து நிற்பது
(1) உடன்கட்டை ஏறிய மாதர்களையாகும். (2) குளம் வெட்டி நற்பணி செய்தோரையாகும்.
(3) போரில் வீரமரணம் அடைந்தோரையாகும். (4) கோயில்களைக் கட்டியோரையாகும்.
(5) அறச்சாலைகள் நிறுவியோரையாகும்.

**21.** சாதாரண மக்களிடையே நிலவிய மாந்திரீக நம்பிக்கைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் நூல்
(1) மனுஸ்மிருதி (2) இராமாயணம் (3) சாகுந்தலம்
(4) இருக்கு வேதம் (5) அதர்வ வேதம்

**22.** ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் தோற்றம் பெற்ற சோதிட நூல்
(1) செகராசசேகரம் (2) கதிரைமலைப்பள்ளு (3) கைலாயமாலை
(4) சரசோதிமாலை (5) பரராசசேகரம்

**23.** அனந்த சயன வடிவம் எதனைக் குறித்து நிற்கிறது?
(1) இறைவன் முக்காலத்தையும் உணர்ந்தவனாய் துயிலும் நிலையையாகும்.
(2) ஐயப்பனது அருள்பாலிக்கும் நிலையையாகும்.
(3) சிவனும் சக்தியும் இணைந்த நிலையையாகும்.
(4) ஆழ்வார்களது வழிபாட்டு நிலையையாகும்.
(5) சிவனது ஆடல் நிலையையாகும்.

**24.** "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்ற கோட்பாட்டை சாதனை வழியில் காட்டியவர்
(1) திருஞானசம்பந்தர் (2) திருநாவுக்கரசர் (3) சுந்தரமூர்த்தி நாயனார்
(4) மாணிக்கவாசகர் (5) சேக்கிழார்

**25.** 'விஞ்ஞானகலர்' எனப்படுவோர் யார்?
(1) ஆணவ மலத்தை மாத்திரம் உடையவர்.
(2) கன்ம மலத்தை மாத்திரம் உடையவர்.
(3) ஆணவம், கன்மம் ஆகிய இரு மலங்களை உடையவர்.
(4) ஆணவம், மாயை ஆகிய இரு மலங்களை உடையவர்.
(5) ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் உடையவர்.

**26.** தைத்திரிய உபநிடதத்தில் குருகுலம் முடித்து வீடு திரும்பும் மாணவனுக்கு குரு கூறும் அறிவுரை யாது?
(1) "இருளில் இருந்து ஒளிக்கு இட்டுச் செல்வாயாக."
(2) "நீ அதுவாக இருக்கிறாய்! பிரமமே அனைத்துமாய் உள்ளது."
(3) "பொய்மையிலிருந்து மெய்மைக்கு இட்டுச் செல்வாயாக."
(4) "உண்மையைப் பேசு, தர்மத்தைக் கடைப்பிடி."
(5) "எல்லோரிடமும் அன்பாய் இரு, இனிமையாகப் பேசு."

**27.** இந்துசமயம் போதிக்கும் தர்மத்தின் தலையாய நோக்கமாக அமைவது யாது?
(1) மனிதகுலம் ஆன்மீகரீதியில் முழுமையும் இன்பமும் அடைய வழிகாட்டுதல்
(2) பக்திநெறிக்கு வழிகாட்டுதல்
(3) நண்பர்களை வழிப்படுத்துதல்
(4) சுற்றத்தவரோடு கூடி வாழ்தல்
(5) இன்சொல் பேசுதல்

**28.** "உலக நாகரிகங்களுக்கு இந்து நாகரிகத்தின் பங்களிப்பு அளப்பரியது" எனக் குறிப்பிடப்படுவதற்கான காரணம் யாது?
(1) பண்டைக் காலந்தொட்டு ஏற்பட்ட அயல்நாட்டுத் தொடர்புகளாகும்.
(2) சமய வழிபாட்டு முறைகளின் பரம்பல், கலைகள், தர்மசாஸ்திரங்களின் செல்வாக்காகும்.
(3) உலகியலுக்கு வழங்கப்படும் முக்கியத்துவமாகும்.
(4) காவியங்களைக் கொண்டமைந்திருக்கின்றமையாகும்.
(5) அறிஞர்களின் பங்களிப்பாகும்.

**29.** கோயிற் கட்டடக் கலையில் 'அதிஷ்டானம்' எனக் குறிப்பிடப்படுவது திருக்கோயிலின் எப்பகுதியாகும்?
(1) கோயில் கட்டடத்திலே உபபீடத்திற்கு மேற்பட்ட பகுதியாகும்.
(2) கோயில் மூலஸ்தானத்திற்கு மேற்பட்ட பகுதியாகும்.
(3) கோயில் கட்டடத்தில் உள்ள திருவாசியாகும்.
(4) கோயிலில் தூண்கள் அமைந்துள்ள பகுதியாகும்.
(5) கோயிலின் நடுப்பகுதியாகும்.

**30.** மேல்வருவனவற்றுள் இராமானுஜருடன் தொடர்புடைய கூற்று எது?
(1) பிரமம் ஒன்றே உண்மைப் பொருள் என விளக்கியவர்.
(2) பிரமத்தைச் சீவன்களாக்குவது அவித்தையே என விளக்கியவர்.
(3) ஐவகைப் பேதங்களை விளக்கியவர்.
(4) உலகம் வெறும் தோற்றமே எனக் குறிப்பிட்டவர்.
(5) அங்க அங்கி பாவத்தை விளக்கியவர்.

**31.** சைவமரபிலே தோத்திரமாகவும் சாத்திரமாகவும் விளங்கும் நூல் எது?
(1) சிவஞானபோதம் (2) திருமந்திரம் (3) திருவருட்பயன்
(4) கந்தபுராணம் (5) சிவப்பிரகாசம்

**32.** 'குடைதளி' என்பது யாது?
(1) கோயில் கருவறையில் இறைவடிவத்தோடு கூடியதாகும்.
(2) பல்லவர் கால கோயிற் கட்டடக்கலை வளர்ச்சியில் ஆரம்ப கட்டமாக அமைவதாகும்.
(3) கோயில் கோபுரத்தோடு கூடியதாகும்.
(4) பாறைகளை மேலிருந்து கீழாகச் செதுக்கி அமைக்கப்படும் கோயிலாகும்.
(5) சிறிய தேவ கோட்டங்களைக் கொண்ட கோயிலாகும்.

**33.** "சிறிய ஆலம் விதையிலிருந்து பெரிய ஆலமரம் தோன்றுவது போன்று நுண்ணிய பிரமத்திலிருந்து உலகம் படைக்கப்பட்டது" எனக் குறிப்பிடும் உபநிடதம்
(1) முண்டக உபநிடதம் (2) மாண்டுக்கிய உபநிடதம் (3) கேன உபநிடதம்
(4) சாந்தோக்கிய உபநிடதம் (5) பிருகதாரணியக உபநிடதம்

**34.** உபநிடதம் கூறும் பிரமம் உலகத்திற்கு அப்பாற்பட்ட நிலையை விளக்கி நிற்பது
(1) நிஷ்பிரபஞ்சநிலை எனப்படும். (2) நிர்க்குணப்பிரமநிலை எனப்படும்.
(3) ஸகுணப்பிரமநிலை எனப்படும். (4) தடத்தநிலை எனப்படும்.
(5) பேதாபேதநிலை எனப்படும்.

**35.** "பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட பாடிய கவிவலவ" எனப் போற்றப்பட்டவர்
(1) அப்பர் (2) சுந்தரர் (3) சேக்கிழார்
(4) சேரமான் பெருமாள் (5) காரைக்கால் அம்மையார்

**36.** திருமூலரால் 'நடமாடுங்கோயில்' என்று சிறப்பித்துக் கூறப்பட்டவர்கள்
(1) பூசகர்கள் (2) சிவனடியார்கள் (3) புலவர்கள்
(4) ஆழ்வார்கள் (5) சிற்பக் கலைஞர்கள்

**37.** சைவசித்தாந்தத்தில் ஆன்மா முத்தியடையும் பக்குவத்தைப் பெறும் நிலையில் அருட்சக்தியாக வருவது
(1) திரோதானம் எனப்படும். (2) கர்மம் எனப்படும். (3) மாயை எனப்படும்.
(4) பக்தி எனப்படும். (5) ஞானம் எனப்படும்.

**38.** "கலை உருவாக்கம் என்பது தூய உளச் செயற்பாடு" எனக் குறிப்பிட்டவரும் இந்துக் கலைக்கு உலகளாவிய பெருமை தேடித்தந்தவருமான ஈழத்துப் பெரியார்
(1) சுவாமி விபுலானந்தர் (2) சேர் பொன். இராமநாதன்
(3) கலாயோகி ஆனந்த குமாரசாமி (4) சுவாமி ஞானப்பிரகாசர்
(5) சேர் கந்தையா வைத்தியநாதன்

**39.** "முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான்... " என்ற அடிகள் இடம்பெறும் நூல்
(1) திருவாசக சிவபுராணம் (2) பெரிய புராணம் (3) பார்கவ புராணம்
(4) கந்தபுராணம் (5) திருமுறைகண்ட புராணம்

**40.** சைவாலய நித்திய பூசையில் இடம்பெறும் மூன்று பொது அம்சங்கள் அடங்கிய தொகுதியைத் தெரிவுசெய்க.
(1) தீபாராதனை, அர்ச்சனை, பிரதோஷம் (2) அபிஷேகம், அலங்காரம், நைவேத்தியம்
(3) தோத்திரம், நிருத்தியம், கலசபூசை (4) பூதசுத்தி, ஜெபம், கார்த்திகைபூசை
(5) நைவேத்தியம், கும்பபூசை, சதுர்த்திபூசை

● **41** தொடக்கம் **45** வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுகளை வாசித்து, அவற்றுக்குப் பொருத்தமானவற்றை பின்வரும் அட்டவணையின் **I, II, III, IV** ஆகிய நிரல்களிலிருந்து தெரிவுசெய்க.

| I | II | III | IV |
|---|---|---|---|
| A<br>பாசம் | F<br>தட்சணாமூர்த்தி | K<br>மானசாரம் | P<br>அங்குசம் |
| B<br>மறை | G<br>மோதக ஹஸ்தம் | L<br>சுயம்பு | Q<br>மயமதம் |
| C<br>சந்திரசேகரர் | H<br>கோயில்கள் செய்த சேவைகள் பெருகியமை | M<br>ஆலயங்களுக்கு அண்மையில் மடங்கள் அமைந்தமை | R<br>எழுதாக்கிழவி |
| D<br>ஆடல் வல்லான் சமயச் சின்னம் | I<br>அபௌருஷேயம் | N<br>திரிபுராந்தகர் | S<br>விக்கிரக்கலை மேன்மையடைந்தமை |
| E<br>விஷ்ணு தர்மோத்திரம் | J<br>சிற்பச் செந்நூல் | O<br>உதரபந்தம் | T<br>லிங்கம் |

**41.** வேதங்களைக் குறிக்கும் வேறு பெயர்களைக் கொண்ட தொகுதி யாது?
(1) A, G, L, P (2) B, F, M, T (3) B, I, L, R (4) C, F, M, T (5) E, I, O, R

**42.** விநாயகரது வடிவத்தோடு தொடர்புடைய தொகுதி யாது?
(1) A, F, K, R (2) A, G, O, P (3) B, H, K, S (4) D, I, O, R (5) E, J, N, R

**43.** சிவனது வடிவங்களைக் குறிக்கும் தொகுதி யாது?
(1) A, F, M, T (2) B, G, K, S (3) C, F, N, T (4) D, J, O, R (5) E, H, L, R

**44.** சோழப் பேரரசின் பெருமையைக் குறிக்கும் தொகுதி யாது?
(1) A, J, O, R (2) B, F, M, T (3) C, F, M, T (4) D, H, M, S (5) E, H, L, R

**45.** இந்துக் கலை மரபிற்குரிய சிற்பநூல்கள் அடங்கும் தொகுதி யாது?
(1) A, G, K, P (2) C, F, M, T (3) D, G, N, T (4) E, J, K, Q (5) E, F, M, Q

● **46** தொடக்கம் **50** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் **பொருந்தாததைத்** தெரிவுசெய்க.

**46. பல்லவர் காலம் இந்துப் பண்பாட்டில் ஏற்படுத்திய செல்வாக்கு**
(1) திருக்கோயில்களும் கோயில் பூசை மரபுகளும் எழுச்சிபெற்றன.
(2) மாமல்லபுர ஒற்றைக் கற்கோயில்களில் அம்பிகைக்கு உரியவையாக அர்ச்சுனன் ரதம், தர்மராஜ ரதம் ஆகியன அமைக்கப்பட்டன.
(3) மகேந்திரவர்மன் காலத்தில் இந்துப் பண்பாட்டு மறுமலர்ச்சியும் சமயநெறியில் திருப்பங்களும் ஏற்பட்டன.
(4) பல்லவருடைய நந்திச் சின்னமும் சிவனது கட்டுவாங்கக் கொடியும் பல்லவர்கள் சைவத்தின் மீது கொண்டிருந்த ஈடுபாட்டைப் புலப்படுத்துகின்றன.
(5) மகேந்திரவர்மன் மண், மரம் தவிர்த்து புதிய கற்கோயில்களைக் கட்டினான்.

**47.** **சுவாமி விவேகானந்தர்**

(1) சுமார் ஐம்பது ஆண்டுகள் பணியாற்றி இந்துப் பண்பாட்டை வளப்படுத்தினார்.
(2) பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த இந்துமத சீர்திருத்தவாதிகளுள் குறிப்பிடத்தக்கவராவார்.
(3) சிக்காக்கோவில் நடைபெற்ற சர்வமத மகாநாட்டில் உலகப்புகழ் பெற்ற சொற்பொழிவு ஆற்றியவராவார்.
(4) இந்து சமயத்துக்கு ஆற்றிய பணிகளுக்காக வேதாந்த சிங்கம், வீரத்துறவி போன்ற சிறப்புப் பெயர்களால் அழைக்கப்பட்டார்.
(5) தமது குருநாதருடைய பெயரினால் இராமகிருஷ்ண மடம் அமைத்து ஆன்மீக இலக்கோடு பணியாற்றினார்.

**48.** **பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள்**

(1) திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவராவார்.
(2) பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமது கலாநிதிப் பட்ட ஆய்வினை மேற்கொண்டார்.
(3) நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் இந்து நாகரிகத்திற்குப் பெருமை சேர்த்த நல்லறிஞராவார்.
(4) ஆன்மீகக் கல்வியை தமது தந்தையாரிடமும் வைதிகக் கல்வியை பிரம்மஸ்ரீ க. சிதம்பர சாஸ்திரிகள், பிரம்மஸ்ரீ சீத்தாராம சாஸ்திரிகள் ஆகியோரிடமும் பெற்றார்.
(5) யாப்பாணப் பல்கலைக்கழகத்தின் இந்து நாகரிகத்துறையின் முதல் பேராசிரியராகவும் தலைவராகவும் விளங்கி பல்கலைக்கழக மட்டத்தில் அப்பாடநெறியின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றினார்.

**49.** **இலங்கையில் இந்து சமய வளர்ச்சிக்கு ஊடகங்களின் பங்களிப்பு**

(1) பத்திரிகைகள் மூலம் சமயஞ் சார்ந்த விடயங்கள் வெளியிடப்படுகின்றன.
(2) ஊகம், கற்பனை முதலியவையும் ஊடக வெளியீடுகளில் காணப்படுகின்றன.
(3) ஊடகத்துறை மனிதன் பரந்த சமய அறிவைப் பெற்றவனாகத் திகழ உதவுகின்றது.
(4) ஊடகங்கள் மக்களின் நல்வாழ்வுக்குத் தேவையான பல தகவல்களை வழங்குகின்றன.
(5) இலங்கையின் இந்து சமய பண்பாட்டு வளர்ச்சிக்கு ஊடகங்கள் நீண்டகாலமாகத் துணைநின்றுள்ளன.

**50.** **சிவாகமங்கள் வளம்படுத்திய திருக்கோயில் பண்பாடு**

(1) சிவாகமங்கள் எண்ணிக்கையில் பதினெட்டு ஆகும்.
(2) சிவாகமங்கள் திருக்கோயில் அமைக்கும் முறை பற்றிக் குறிப்பிடுகின்றன.
(3) சிவாலயப் பண்பாட்டை வளப்படுத்தும் மூலாதாரமாகச் சிவாகமங்கள் தொழிற்படுகின்றன.
(4) சிவாகமங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு பாதங்களை விளக்குகின்றன.
(5) கிரியாபாதமானது திருக்கோயில் அமைத்தல், பிரதிஷ்டை, உற்சவம் முதலிய கிரியைகளை எடுத்துக்கூறுகின்றது.

***

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2019

## නව නිර්දේශය/ புதிய பாடத்திட்டம்

විෂය අංකය / பாட இலக்கம்: **46**

විෂයය / பாடம்: **இந்து நாகரிகம்**

## ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

### I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 11. | 1 | 21. | 5 | 31. | 2 | 41. | 3 |
| 02. | 5 | 12. | 4 | 22. | 1/4 | 32. | 2 | 42. | 2 |
| 03. | 4 | 13. | 5 | 23. | 1 | 33. | 4 | 43. | 3 |
| 04. | 2 | 14. | 5 | 24. | 2 | 34. | 1 | 44. | 4 |
| 05. | 4 | 15. | 2 | 25. | 1 | 35. | 3 | 45. | 4 |
| 06. | 4 | 16. | 2 | 26. | 4 | 36. | 2 | 46. | 2 |
| 07. | 4 | 17. | 1 | 27. | 1 | 37. | 1 | 47. | 1 |
| 08. | 2 | 18. | 5 | 28. | 2 | 38. | 3 | 48. | 2 |
| 09. | 4 | 19. | 2 | 29. | 1 | 39. | 1 | 49. | 2 |
| 10. | 3 | 20. | 3 | 30. | 5 | 40. | 2 | 50. | 1 |

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 1 × 50 = 50

# இந்து நாகரிகம்

## வினாத்தாள் II

## வினாத்தாளின் குறிக்கோள் பற்றிய அறிமுகம்

1. பாடசாலைகளில் பயனுறுதிமிக்க கற்றல் – கற்பித்தல் பற்றிய செயற்பாட்டின் பயன்பாட்டை இவ்வினாத்தாள் மூலம் மதிப்பீடு செய்தல்.

2. இந்து நாகரிகம் தொடர்பான பாடத்திட்டத்தில் உள்ள விடயங்களிலே மாணவர்களின் அடைவு மட்டத்தினைப் பரீட்சித்தல்.

3. இந்துப்பண்பாட்டு விழுமியங்களை நடைமுறை வாழ்வில் கைக்கொள்ளக் கூடியவர்களாகத் தமது அறிவுத் திறனைப் பெற்றுள்ளனரா? என்பதைப் பரீட்சித்தல்.

4. இந்து நாகரிகம் தொடர்பான விடயங்களைக் கற்று தத்தமது ஆளுமைகளை விருத்தி செய்யக்கூடிய தகுதியுள்ளனரா? என்பதைப் பரீட்சித்தல்.

5. இப்பாடத்தில் அடங்கியுள்ள விடயங்களைச் சமூக விருத்திக்கும் சமூக நல்லிணக்கத்திற்கும் எவ்வெவ் வகைகளில் பயன்படுத்தக்கூடிய அறிவுத் திறன் பெற்றுள்ளனர் என்பதைப் பரீட்சித்தல்.

6. மாணவர்கள் தேசிய மட்டத்திற்குரிய தகுதியைப் பெற்றுனள்ளனரா? என்பதைப் பரீட்சித்தலும் இதன் நோக்கமாகும்.

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
NEW
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

හින්දු ශිෂ්ටාචාරය II
இந்து நாகரிகம் II
Hindu Civilization II

46 T II

06. 08. 2019 / 0830 - 1140

පැය තුනයි
*மூன்று மணித்தியாலம்*
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :**

- ✳ பகுதி **I** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் பகுதி **II** இலிருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- ✳ ஒவ்வொரு வினாவுக்கும் **இருபது** புள்ளிகள் உரித்தாகும்.

## பகுதி I

**1.** இறைவன் பற்றிய சைவசித்தாந்த சிந்தனைகளை மேல்வரும் தலைப்புக்களில் பரிசீலிக்குக.

(அ) இறை உண்மை

(ஆ) இறைவனின் இலக்கணம்

(இ) ஆன்மாவும் இறைவனும்

(ஈ) ஆன்மீக விடுதலையும் இறையருளும்

**2.** இலங்கையில் இந்து சமய வரலாற்றில் அனுராதபுரக் காலம் பெறும் முக்கியத்துவத்தை மேல்வரும் தலைப்புகளைக் கருத்திற்கொண்டு ஆராய்க.

(அ) கோயில்கள்

(ஆ) காலச்சூழல்

(இ) சான்றாதாரங்கள்

(ஈ) மன்னர்களின் பணி

**3.** இந்து நாகரிக வரலாற்றில் சமூக சீர்திருத்த இயக்கங்களினதும் பக்திநெறியாளர்களினதும் பங்களிப்புகள் போற்றத்தக்கன.

(அ) சமூக சீர்திருத்த இயக்கங்கள் தோற்றம் பெறுவதற்கு ஏதுவான காரணங்களைத் தருக.

(ஆ) பக்தி இயக்கத்தில் நாயன்மார்களின் பங்களிப்பு பற்றிக் குறிப்பிடுக.

(இ) இந்து நாகரிகத்தின் வளர்ச்சிக்கு கபீர்தாசர் **அல்லது** துளசிதாசர் ஆற்றிய பங்களிப்புகள் பற்றிச் சுருக்கமாக விவரிக்குக.

(ஈ) வட இந்திய பக்தி இயக்கத்துக்கும் பல்லவர் கால பக்தி இயக்கத்துக்கும் இடையில் காணத்தக்க பொதுப் பண்புகளைச் சுருக்கமாக விளக்குக.

## பகுதி II

**4.** இந்துப் பண்பாட்டில் திருக்கோயில்களை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் கலைகள் வளர்ந்தவாற்றை விளக்குக.

(அ) இசைக்கலை

(ஆ) கட்டடக்கலை

**5.** இந்துக்களின் சமய பண்பாட்டு வாழ்வினை வளம்படுத்துவதில் பகவத்கீதை பெறும் முக்கியத்துவத்தினை மேல்வரும் தலைப்புக்களில் பரிசீலிக்குக.

(அ) பகவத்கீதையின் உருவாக்கம்

(ஆ) பகவத்கீதையின் சிறப்பம்சங்கள்

**6.** வேதாந்த தத்துவ வளர்ச்சியில் மத்துவரின் துவைத வேதாந்தத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை மேல்வருவனவற்றைக் கருத்திற்கொண்டு விளக்குக.

(அ) தோற்றம் பெற்றமைக்கான பின்னணி

(ஆ) துவைதக் கோட்பாட்டின் முக்கியத்துவம்

**7.** விஜயநகர நாயக்கர் காலத்தில் இந்துப் பண்பாட்டில் ஏற்பட்ட மாற்றங்களை மேல்வருவனவற்றைக் கருத்திற்கொண்டு பரிசீலிக்குக.

(அ) அக்காலச் சூழ்நிலை

(ஆ) சமயநிலை

**8.** இந்து அறிவியல் வளர்ச்சியில் வானியலின் சிறப்பம்சங்களை மேல்வருவனவற்றைக் கருத்திற் கொண்டு ஆராய்க.

(அ) வானியற் கோட்பாடுகள்

(ஆ) பண்டைய இந்தியரின் வானியற் பணிகள்

❋ ❋ ❋

# 46 இந்து நாகரிகம் II
## பகுதி I

**01. இறைவன் பற்றிய சைவசித்தாந்த சிந்தனைகளை மேல்வரும் தலைப்புக்களில் பரிசீலிக்குக.**

**(அ) இறை உண்மை**
**(ஆ) இறைவனின் இலக்கணம்**
**(இ) ஆன்மாவும் இறைவனும்**
**(ஈ) ஆன்மீக விடுதலையும் இறையருளும்**

**(அ) இறை உண்மை**

- சைவசித்தாந்தம் பதி என்ற நிலையில் இறைவன் உண்மைப்பொருள் என்பதனை முதலில் நிறுவுகின்றது.அதற்கு பிரத்தியட்சம்,அனுமானம்,ஆப்தவாக்கியம் என்பவற்றை மூலமாகக் கொள்கின்றது. பானை உண்டெனில் அதனைப்படைத்தவனும் உள்ளான் என்பதன் அடிப்படையில் நிறுவுகின்றது. உலகைக் கொண்டு கடவுள் உண்டு என்பதை நிரூபிக்க இந்த அனுமானம் உதவுகின்றது.

- ஆன்மா செய்த வினைகளின் பயன்கள் அவ்வான்மாக்களைச் சென்று சேராது.அவ்வாறு அவற்றைச் சேர்க்க ஒருவன் வேண்டும்.அவனே இறைவன்.அவனே தனு,கரண,புவன,போகங்களைத் தருபவன். உலகைப் படைத்த நிமித்தகாரணன் இறைவனே எனச் சைவசித்தாந்தம் கூறும். மாயை முதற் காரணம். சக்தி துணைக்காரணம்.

- இறைவனது உண்மைத்தன்மை அனுபூதி பெற்ற தத்துவ ஞானிகளது வாக்குகளாலும் தேவார திருவாசகக் கருத்துக்களாலும் சைவசித்தாந்த சாத்திரங்களினாலும் நிறுவப்படுகின்றது.

**( 05 புள்ளிகள் )**

**(ஆ) இறைவனின் இலக்கணம்**

- இறைவன் ஆதியும் அந்தமும் இல்லாதவன். அநாதியானவன். இறைவன் அனைத்து உயிர்களுக்கும் உலகங்களுக்கும் தலைவன்.
- பதியே மேலான பொருள்
- ஒரு நாமம் ஓர் உருவம் இல்லாதவன். தத்துவங்களைக் கடந்தவர்.
- தத்துவங்களோடு பிரிந்தும் பிரிப்பின்றியும் நிற்பவர்
- சிறப்பியல்பு : சொரூபலட்சணம்
- சிறப்பியல்பு : தடத்தலட்சணம்

- இறைவன் உயிர்களின் பொருட்டு ஐந்தொழில்களையும் செய்வதற்குரிய திருவருளைத் திருமேனியாகக் கொண்டு எழுந்தருளுவார். இது தடத்தநிலை. இந்நிலையில் உருவம் குணம் குறி செயலும் உடைய மூர்த்தியாக இருப்பார்.

- கருவி கரணங்களுக்கு அப்பாற்பட்டு நிற்பது சொரூபலக்கணம். பதியின் இயல்பு ஞானமும் ஆனந்தமு-மாகும். இதனை சத்சித் ஆனந்தம் என்பர். இம் மூன்றினுள்ளும் இறைவனின் எண்குணங்கள் அடங்கும். என்றுமுள்ள எக்காலத்தும் ஒரே தன்மையான பொருள் சத். தன்வயத்தனாதல் அதனுள் அடங்கும்.

- சித்தில் தூய உடம்பினனாதல், முற்றுமுணர்தல்,இயற்கை உணர்வினனாதல் ,இயல்பாகவே பாசங்களில் நின்று நீங்குதல். பேரருள் உடைமை,முடிவில் ஆற்றலுடைமை ஆகிய குணங்கள் குறிப்பிடற்பாலன.

- ஆனந்தத்தில் வரம்பில் இன்பமுடைமை அடங்கும். இவ்வாறான எண்குணங்கள் இறைவனின் இலக்கணத்திற்குச் சான்று.

- இறைவன் அருவம், உருவம், அருவுருவம் ஆகிய திருமேனிகளைக் கொண்டு விளங்குகின்றார்.

**( 05 புள்ளிகள் )**

**(இ) ஆன்மாவும் இறைவனும்**

- வரையறை இல்லாத அறிவுடைய பொருள் பதி. வரையறைஉள்ள அறிவுடைய பொருள் பசு.
- ஆன்மா செய்த வினைகளின் பயன்கள் அவ்வான்மாக்களைச் சென்று சேராது.
- அவ்வாறு அவற்றைச் சேர்க்க ஒருவன் வேண்டும். அவனே கடவுள்.
- இறை அனுபூதி பெற்ற தத்துவ ஞானிகளது வாக்குகளாலும் அவர்களால் உருவாக்கப்பட்ட வேத ஆகமங்கள், சைவசித்தாந்த சாத்திரங்கள், தேவார திருவாசகங்களின் கருத்துக்களாலும் பதி உண்மை நிறுவப்படுகின்றது.

- ஆன்மா அறிவித்தால் அறிவது.
- ஆன்மா சதசத்து.
- இறைவன் ஆதி அற்ற பரம்பொருள், சித்துப் பொருள்.
- ஆன்மா வினைப் பயனுக்கேற்ப இறைவன் ஆணைக்குட்பட்டு பிறவி எடுக்கும்.
- ஆன்மாவுக்குத் தனு கரண புவன போகங்களை அளிப்பவர் இறைவன்.
- ஆன்மா இறைவன் மீது பக்தி கொண்டு நாற்பாதங்கள் மூலம் இறைவனை அடையும்.
- இறைவன் உயிர்களுடன் ஒன்றாய் வேறாய் உடனாய் நிற்பான்.
- இறைவன் ஆன்மா தொடர்பை தாடலை என்ற சொல் குறிப்பிடும்.

**( 05 புள்ளிகள் )**

**(ஈ) ஆன்மீக விடுதலையும் இறையருளும்**

- சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள்களில் ஆன்மாவும் ஒன்று. சதசத்து எனப்படுவது. பசு கடவுளைப் போன்று அநாதியானது. சைவசித்தாந்தத்தில் இறைவன் உயிர்களுடன் ஒன்றாய் உடனாய் வேறாய் நிற்பான். தடத்த நிலையில் இறைவன் ஆற்றும் ஐந் தொழில்கள் ஆன்மாவுக்கு விடுதலையடைய உதவுவன.
- சைவசித்தாந்தத்தில் ஆன்மா விடுதலையடைய இறையருள் இன்றியமையாதது.
- இந்த ஐந்தொழில்களும் ஆன்மாவுக்குரிய பக்குவ நிலையை ஏற்படுத்தி, அவற்றின் மலபாகத்தை ஒழித்து ,வீடுபேறு என்னும் ஆன்ம விடுதலையை நல்குவது இறையருளாகும் .பிறவியெடுத்த ஆன்மாவுக்கு சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு நெறிகள் கைகூட இறைவனது அருள் அவசியமாகும்.
- இறையருள் எங்கும் நிறைந்து விளங்கும்.
- ஆன்ம விடுதலைக்கு உதவும் ,இறைவன் குரு வடிவாக வந்து உதவுவார்.
- இருவினையொப்பு மலபரிபாகம், சக்திநிபாதம் ( ஆன்மா திருவருட் சக்தி பதிதல்) தீட்சை ஆகியவை ஆன்மாவின் விடுதலைக்கு உதவும்.
- மனிதப் பிறவியெடுத்த ஆன்மா மேற்சொன்ன ஒழுக்கத்தை இறைபணி நிற்றல் என்பர்.
- அகப் பூசை, புறப்பூசை, திருக்கோயில் வழிபாடு, ஆலய சேவை, அடியார் வழிபாடு, ஆகியவற்றால் இறைவனோடு ஆன்மா தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளும் வாய்ப்பு உள்ளது. ஆன்மா விடுதலை நிலையில் இறைவன் ஆன்மா தொடர்பை தாடலை எனக் குறிப்பிடுவர். (தாள் +தலை)

**( 05 புள்ளிகள்)**

**(மொத்தம் 5 +5 +5 +5 = 20 புள்ளிகள் )**

**02 . இலங்கையில் இந்து சமய வரலாற்றில் அனுராதபுர காலம் பெறும் சிறப்பினை மேல்வரும் தலைப்புக்களைக் கருத்திற் கொண்டு ஆராய்க.**

**(அ) கோயில்கள்**
**(ஆ) காலச் சூழல்**
**(இ) சான்றாதாரங்கள்**
**(ஈ) மன்னர்களின் பணி**

**(அ) கோயில்கள்**

- இந்துசமயத்தில் வழிபடப்படும் தெய்வங்கள் தொடர்பான ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.
- சிவன், விஸ்ணு, முருகன் , கணபதி போன்ற தெய்வங்கள் இக்கால மக்களால் வழிபடப்பட்டதாக அறியமுடிகின்றது.

- சிவபாலித, சிவரக்கித, விணு, கோபால, வேலச, கண, கணகுட்டச போன்ற தொடர்கள் அக்காலத் தெய்வங்கள் தொடர்பாகக் கிடைக்கப்பெற்ற பிராமிக் கல்வெட்டுச் சான்றாகும்.
- அனுராதபுர அழிபாடுகள் மத்தியில் இந்துத் தெய்வங்களின் வெண்கலப் படிமங்கள் கிடைக்கப்பெற்றமை.
- இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் இந்து ஆலயங்கள் பல காணப்பட்டன.
- கதிர்காம முருகன் ஆலயத்தை துட்டகைமுனு வழிபட்டமை.
- தேவேந்திர முனையில் உப்புல்வன் ஆலயம் சிறப்புற்று இருந்தமை.
- திருக்கேதீஸ்வரம், திருக்கோணேச்சரம் போன்ற ஆலயங்கள் புகழ்பெற்று விளங்கியமை போன்ற ஆதாரங்களை இங்கு குறிப்பிடலாம் .

**(5 புள்ளிகள்)**

**(ஆ) காலச் சூழல்**

- இலங்கை வரலாற்றில் கி.மு 3 ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி 9ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதி அனுராதபுர காலம் எனக் கொள்ளப்டுகின்றது.
- தேவநம்பிய தீசனின் காலம் முதல் 5ஆம் மகிந்தன் ஆட்சிக்காலம் வரையான காலப்பகுதியாக இது உள்ளது.
- பண்டுகாபய மன்னன் புரோகிதரிடம் கல்வி கற்றதாகவும் அரண்மனையில் வைதீக புரோகிதர்கள் ஆலோசனை வழங்கியதாகவும் வைதீகச் சடங்குகள் செய்ததாகவும் கூறப்படுகின்றது.
- பௌத்தசமய நம்பிக்கைகளும் இந்துசமய நம்பிக்கைகளும் வளர்ச்சியடைந்த காலமாக அனுராதபுர காலம் அமைகின்றது.
- இக்காலப்பகுதியில் இந்துசமயமானது தனித்துவ நிலையிலும் பௌத்த சமய மரபுகளுடனும் இணைந்தவகையில் வளர்ச்சியடைந்தது.
- அனுராதபுர கால இந்துசமய வளர்ச்சியில் இந்தியாவின் குறிப்பாக தமிழகத்தில் ஏற்பட்ட அரசியல் நிலை சமய மறுமலர்ச்சி என்பன அதிக செல்வாக்குச் செலுத்திய காலச் சூழலாகும்.

**(5 புள்ளிகள் )**

**(இ) சான்றாதாரங்கள்**

- இந்துசமயம் இந்தியாவைப் போலவே இலங்கையிலும் தனித்துவமும் வரலாற்றுப் பழைமையும் கொண்டது.
- அனுராதபுர கால இந்துசமய வளர்ச்சி பற்றி அறிந்துகொள்ள பல புதைபொருள் சின்னங்கள் உதவுகின்றன.

- தமிழ்மொழி, பாளி, சிங்களம் மற்றும் சமஸ்கிருத மொழிகளில் தோன்றிய இலக்கியங்கள் பிற நாட்டவர் குறிப்புக்கள் முதலானவை இலக்கியச் சான்றுகள் ஆகும்.

- சமஸ்கிருத மொழி நூல்களுள் இதிகாச புராணங்கள் முக்கியமானவை பாளி இலக்கியங்களில் மகாவம்சம், சூளவம்சம் முதலியவற்றைக் குறிப்பிடலாம்

- புதைபொருள் சின்னங்களாக வரலாற்றுக் காலத்தில் அமைக்கப்பட்ட கோயில்கள் சிற்பங்கள் ,கல்வெட்டுக்கள் முதலானவை உள்ளன.

- பௌத்த சமய மரபுகளுடன் இணைந்த வகையில் இந்துசமயம் சார் புதைபொருள் சின்னங்கள் காணப்படுதல் சிறப்பம்சமாகும்.

**(5 புள்ளிகள்)**

**(ஈ) மன்னர்களின் பணி**

- இலங்கை மன்னர்கள் பௌத்த சமயத்தை தழுவிய போதிலும் இந்துசமய வளர்ச்சிக்கு தமது ஆதரவை வழங்கினர்.

- இரண்டாம் மகிந்தன், இரண்டாம் சேனன், எல்லாளன், துட்டகைமுனு போன்ற மன்னர்களின் காலத்தில் இந்துசமய நம்பிக்கைகள் நன்நிலையில் இருந்ததாக அறியமுடிகின்றது.

- மன்னர்கள் தமது பெயர்களில சிவ என்னும் அடைமொழிகளைப் பயன்படுத்தினர் உதாரணம் : கிரிகண்ட சிவ, மகாசிவ, முடசிவ முதலானவை குறிப்பிடத்தக்கவை.

- சிங்கள மன்னர்கள் தம் அரண்மனைகளில் வைதீக சடங்குகளை ஆற்றுதல்

- இந்து ஆலயங்களை வழிபடுதல், புரோகிதர்களுக்குத் தானம் வழங்குதல் என இந்து சமயத் தொடர்புகளைக் கொண்டிருந்தனர்.

- மகாவம்சம், சூளவம்சம் போன்ற பாளி இலக்கியங்கள் சிங்கள மன்னர்கள் இந்து ஆலயங்களை புனர் நிர்மாணம் செய்தமை. கதிர்காமம் போன்ற ஆலயங்களை வழிபட்டமை போன்ற செய்திகளைத் தருகின்றன.

**(5 புள்ளிகள்)**

**(மொத்தம் 5 +5 +5 +5 = 20 புள்ளிகள்)**

**03. இந்துநாகரிக வரலாற்றில் சமூக சீர்திருத்த இயக்கங்களினதும் பக்திநெறியாளர்களினதும் பங்களிப்புக்கள் போற்றத்தக்கன.**

**(அ) சமுதாய சீர் திருத்த இயக்கங்கள் தோற்றம் பெறுவதற்கு ஏதுவான காரணங்களைத் தருக.**

**(ஆ) பக்தி இயக்கத்தில் நாயன்மார்களின் பங்களிப்புக்கள் பற்றிக் குறிப்பிடுக.**

**(இ) இந்து நாகரிகத்தின் வளர்ச்சிக்கு கபீரதாசர் அல்லது துளசிதாசர் ஆற்றிய பங்களிப்புக்கள் பற்றி சுருக்கமாக விபரிக்குக.**

**(ஈ) வட இந்திய பக்தி இயக்கத்திற்கும் பல்லவர் கால பக்தி இயக்கத்திற்கும் இடையில் காணத்தக்க பொதுப்பண்புகளை சுருக்கமாக விளக்குக.**

**(அ). சமுதாய சீர்திருத்த இயக்கங்கள் தோற்றம் பெறுவதற்கு ஏதுவான காரணங்களைத் தருக**

- மூட நம்பிக்கைகள்,பழக்கவழக்கங்கள் மேலோங்கிக் காணப்பட்டமை
- மக்கள் பழைய மரபுகளுக்கு உட்பட்டு வாழ்ந்தமை
- சமய, சமூக ரீதியாக மக்கள் மத்தியில் புரையோடிக் காணப்பட்ட மூடநம்பிக்கைகள்.
- கல்வி அறிவு போதாமையாக காணப்பட்டமை
- பாலியல் விவாகம்
- உடன் கட்டை ஏறுதல்
- விதவைகள் மறுமணம்
- பலதார மணம்
- நரபலி முறைமை
- வருண வகுப்பு
- பசுவதை போன்ற மூடநம்பிக்கைகள் குறிப்பிடத்தக்கன.

**(5 புள்ளிகள் )**

**(ஆ). பக்தி இயக்கத்தில் நாயன்மார்களின் பங்களிப்புக்கள் பற்றிக் குறிப்பிடுக.**

- சங்க மருவிய காலத்தில் இறுதிக் கட்டத்தில் அவதரித்த காரைக்கால் அம்மையார் இல்லற வாழ்வு வாழ்ந்த இடத்திலும் பக்தி மார்க்கத்தை தன் வாழ்விலும் வாக்கிலும் வெளிப்படுத்தியவர்.
- அவரது திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் முதலான நூல்கள் பக்தியின் சிறப்புக்கு சிறந்த சான்று
- பல்லவர்கால பக்தி இயக்கத்தின் முக்கிய பங்கெடுத்த நாயன்மார்களுள் சம்பந்தர், அப்பர், சுந்தரர் முதலானோர் குறிப்பிடத்தக்கவர்.இவர்களது அரிய பணிகளால் பக்தி இயக்கம் வளம் பெற்றது.
- பக்தி இயக்கத்தவர் அனைத்து மக்களையும் தம்பால் ஈர்ப்பதற்கு ஏற்ற வகையில் பங்களிப்பு நல்கினர்.
- தமிழகத்தில் எல்லா இடங்களிலும் சைவநெறி தழைத்தோங்குவதற்குப் பணியாற்றினர்.
- அவைதீக சமயங்களை ஆதரித்த அரசர்களை சைவசமயத்தில் ஈடுபாடு கொள்ள வைத்தமை நாயன்மார்கள் வழிநடத்திய பக்தி இயக்கத்தின் முக்கிய பணியாகும்.
- அப்பர் மகேந்ததிரவர்மனின் மதமாற்றத்திற்கு காரணமாக அமைந்தார்.
- பாண்டியநாட்டில் சைவநெறி நிலைபெறவும் திருஞான சம்பந்தர் காரணமாக அமைந்தார்
- திருக்கோயில்களைத் தரிசித்து பதிகங்கள் பாடி மக்களையும் தமது இயக்கத்தில் இணைத்தனர்.
- இவர்களது அரிய பங்களிப்பினால் பாடல் பெற்ற தலங்களாக திருக்கோயில்கள் சிறப்புப் பெற்று பக்தி இயக்கத்திற்கு நிலைக்களனாக அமைந்தன.

- ஆலய வழிபாடு சிறப்புற்றது. புறச் சமயக் கண்டனம், சைவசமய மீட்டுருவாக்கம் ,இறைவனை அன்பு வழியில் வழிபடல் தோத்திரப்பாடல்கள் தோற்றம், இசையுடன் பாடல் ,சிவசின்னங்களைப் பேணல், பஞ்சாட்சர மந்திரம் ஓதுதல் போன்றவை சைவ பக்தி இயக்கத்தில் சிறப்புப்பெற நாயன்மார்களது பங்களிப்பே காரணமாகும்.

- அற்புதங்கள் மூலம் இறைபக்தியை வளம்படுத்தினர். பொதுமக்களும் நாயன்மார்களுடன் இணைந்து வழிபாட்டில் ஈடுபட்டனர்.

**(5 புள்ளிகள்)**

**(இ) இந்துநாகரிக வளர்ச்சிக்கு கபீர்தாசர் அல்லது துளசிதாசர் ஆற்றிய பங்களிப்புக்கள் பற்றி சுருக்கமாக விபரிக்குக.**

**கபீர்தாசர்.**

- வடஇந்திய பக்திநெறியாளர்களின் பணிகளுள் பக்தி போதனை மூலம் பிரபக்தி நெறியை போதித்தவர்களுள் கபீர்தாசர் குறிப்பிடத்தக்கவர்.விஷ்ணுவையே உயர்கதியாகக் கொண்டு அவனையே வழிபட்டவர். இந்து இஸ்லாமிய இணைப்பின் மூலம் சமய இன ஒற்றுமையை மக்களிடையே வளர்த்தெடுத்த பெருமையும் இவருக்குரியது.

- 1398ம் ஆண்டில் காசியில் பிறந்தவர். வைணவசமயத்தை மறுமலர்ச்சியடையச் செய்தவர்.

- இளமையில் அஸ்தானந்தா என்பவரிடம் இந்துசமய அறிவுரைகளைக்கேட்டவர்.

- இராமனந்தரிடம் வேதாந்தம்,யோகம்,சாங்கியம் முதலான தத்துவங்களின் சிறப்பம்சங்களைக் கற்றுக்கொண்டவர்.

- இஸ்லாமியப் பெரியாரிடமும் இஸ்லாமியக் கருத்துக்களையும் கேட்டறிந்தார்.

- விஷ்ணுவிடமே முற்றாகச் சரணடைந்து அவர் புகழ் பாடித்திரிந்தார்.பலர் இவரது செயற்பாட்டை விரும்பாதுவிடினும் அவருக்குப் பல சீடர்கள் உருவாகினர்.

- பசுக்கொலையை எதிர்த்தார். சாதிப்பாகுபாட்டை வெறுத்தார். இவரது பாடல்கள் கபீர்பந்தி எனச்சிறப்புப் பெறுகின்றன.இவரது இந்நூலில் 50 கோட்பாடுகள் கூறப்படுகின்றன. சத்குரு சிறப்பு, சத்சங்க சிறப்பு, உண்மையான அன்பு,தாராளமனப்பான்மையே மோட்சத்திற்கு வழி போன்ற உண்மைகள் குறிப்பிடப்படுகின்றன.குருவழிபாடு,கடவுள் நம்பிக்கை,சேவைமனப்பாங்கு என்பனவும் அவரது போதனைகள்.அவரது போதனைகள மக்களால் பின்பற்றப்பட்டன.சீக்கிய மதத்தை நிறுவிய குருநானக் கபீர்தாசரின் முக்கிய சீடராவர்.1518ம் ஆண்டு சமாதியடைந்தார்.

- இவரது இத்தகைய பணிகளால் வைணவநெறி சிறப்புற்று பிரபக்திநெறி மலர்ச்சியடைந்து பக்திஇயக்கம் வளம்பெறலாயிற்று.

.

**துளசிதாஸர்.**

- வடஇந்திய பக்திநெறியாளர்களுள் துளசிதாஸரின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும்.
- பாந்தா மாவட்டத்தில் ராசாப்பூர் கிராமத்தில் பிறந்த இவர் இளமையில் வறுமை காரணமாக வால்மீகி இராமயணக்கதையை மக்களிடையே பிரசாரஞ்செய்து தமது வாழ்க்கையை நடத்தியவர்.
- துளசிதாஸர் வால்மீகியின் அவதாரமாகவும் கருதப்படுகின்றார்.
- சிரசந்தீபனி, கிருஷ்ணகீதாவளி, கவிதாவளி, ராமசரிதமானஸ், ஜானகி மங்களம் போன்ற பல நூல்களை எழுதி பக்தி நெறி வளம் பெற பங்காற்றியவர்.
- இராமானுஜரைப் போன்று ஒப்புயர்வற்ற கடவுள் நம்பிக்கை கொண்டவர் .ஆன்மா,கன்மம்,மறுபிறப்பு, முத்தி ஆகியவை பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.
- துளசிதாஸரால் இயற்றப்பட்ட அனுமன் சாலிசா என்னும் நூல் அனுமனைப் புகழ்ந்து பாடும் நூலாகும்.
- இந்துக்கள் பலர் இந்நூலைத் தினமும் இறைவழிபாட்டின் போது ஓதி வருகின்றனர்.
- மக்களின் ஒழுக்கத்தினை மேம்படுத்தும் நோக்குடன் ஸ்ரீராமனிடம் முறையிட்டு எழுதியதே விநயபத்திரிகா .
- வடஇந்திய பக்தி இயக்கத்திற்கு இவரின் பங்களிப்பு மகத்தானது.
- ராமசரிதமானசம் இவரின் சமயப்பற்றிற்கும் கவித்திறனுக்கும் சிறந்த சான்றாக விளங்குகின்றது.இந்நூல் துளசிராமாயணம் என அழைக்கப்படுகின்றது.
- இவ்வகையில் இவரது சமயப்பணி வடஇந்திய பக்திநெறியை வளம்படுத்தியமை குறிப்பிடற்பாலது.

**(5 புள்ளிகள் )**

**(ஈ) வட இந்திய பக்தி இயக்கத்திற்கும் பல்லவர் கால பக்தி இயக்கத்திற்கும் இடையில் காணத்தக்க பொதுப்பண்புகளைச் சுருக்கமாக விளக்குக.**

- தமிழகத்தில் பல்லவர் காலத்தில் வளர்ச்சி பெற்ற பக்தி இயக்கமும் மராட்டிய மாநிலத்தில் தோன்றிய பக்தி நெறியும் வட இந்திய பக்தி இயக்கத்தின் உருவாக்கத்திற்கு அதிகளவு பங்களிப்பினைச் செய்தன.
- நாயன்மார்கள், ஆழ்வார்கள், ஆச்சாரியார்கள் என்று பலரும் தமிழகத்து பக்திநெறியை வளர்த்தனர்.
- இவ்வடியார்களால் வளர்த்தெடுக்கப்பட்ட தமிழக பக்தி இயக்கத்தின் பல்வேறு பண்புகளும் வட இந்திய பக்தி இயக்கத்தில் வெளிப்படுவதனைக் காணலாம்.

- பிற சமயங்களின் எழுச்சியே இவ்விரு பிரதேசங்களிலும் பக்தி இயக்கங்கள் தோன்றுவதற்குக் காரணமாக அமைந்தது.

- சமண பௌத்த சமயங்கள் தமிழகத்தில் பெற்ற எழுச்சியும் அதனால் இந்து சமயம் பெற்ற வீழ்ச்சியும் பல்லவர்கால பக்தி இயக்கம் தோன்றுவதற்கு முக்கிய காரணம். அதே போல இஸ்லாமிய சமயத்தின் வருகையும் அதன் வளர்ச்சியும் வட இந்திய பக்தி இயக்கம் தோன்றுவதற்கு முக்கிய காரணம் என்பர்.

- தமிழகத்தில் சைவ, வைணவ பக்தி இயக்கத்தினர் தமது தாய்மொழியான தமிழில் மேற்கொண்ட செயற்பாடுகளை வட இந்திய பக்தி நெறியாளர்கள் தத்தமது பிரதேச மொழிகளில் பக்தி சார் நடவடிக்கைகளை முன்வைத்தனர்.

- நாயன்மார்கள், ஆழ்வார்கள் கையாண்ட தோத்திர மரபின் தொடர்ச்சியை வட இந்திய பக்தி இயக்கத்திலும் காணலாம்.

- நாயன்மார்களின் பாடல்கள் தேவாரங்களாகவும் ஆழ்வார் பாடல்கள் பாசுரங்களாகவும் அமைந்தன.

- வட இந்திய பக்தி இயக்கத்தவர்களுடைய பாடல்கள் பஜனைப் பாடல்களாகவும் கீர்த்தனைகளாகவும் அமைந்தன.

- பல்லவர் கால பக்தி இயக்கத்தில் காணப்பட்ட சமத்துவ நோக்கு, சமூக சேவை போன்ற பண்புகள் வட இந்திய பக்தி இயக்கத்திலும் உண்டு.

- இரு வேறு பக்தி இயக்கத்தவர்களும் சாதி பேதங்களுக்கு அப்பால் அனைவரும் அன்பு எனும் பக்தி மார்க்கத்தால் ஒன்றுபட்டனர்.

**(5 புள்ளிகள் )**

**(மொத்தம் 5 +5 +5 +5 = 20 புள்ளிகள் )**

**04. இந்துப்பண்பாட்டில் திருக்கோயில்களை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் கலைகள் வளர்ந்தவாற்றை விளக்குக.**

**(அ) இசைக்கலை.**

**(ஆ) கட்டடக்கலை.**

**(அ) இசைக்கலை.**

- நுண்கலைகளுள் இசைக்கலை கோயில்களை நிலைக்களனாகக் கொண்டு வளர்ச்சியடைந்தது.

- இசை இறைவழிபாட்டில் முக்கியத்துவம் பெறுகின்றது.பக்திநெறியை வளம்படுத்தியது.

- வேதங்களிலுள்ள மூவகை ஸ்வரங்கள் மற்றும் சாமவேதம் இசைக்கலைக்கு ஆதாரமானவை. வேதபாராயணம் ஸ்வரத்துடன் இன்றும் பண்பாட்டின் நிலைக்களனாகிய ஆலயங்களில் இடம்பெற்று வருகின்றன.

- புராணங்களில் இறைவனே இசைவடிவினன் என்னும் கருத்து காணப்படுகின்றது.இசைவாத்தியங்கள் தெய்வங்களோடு தொடர்புபடுகின்றன.
- சிவன்--உடுக்கு: நாரதர்---தம்புரா: சரஸ்வதி: வீணை: கண்ணன்--புல்லாங்குழல்.
- பல்லவர் காலத்தில் இசை திருக்கோயிலோடு தொடர்புபட்டு வளர்ச்சியடைந்தது.இக்காலத்தில் பக்திநெறியில் பண்ணிசை திருப்பதியம் பண்ணோடு பாடும் மரபு குறிப்பிடற்பாலது.
- நாயன்மார்களும்,ஆழ்வார்களும் திருக்கோயிலை நிலைக்களனாக்கொண்டு இசையினைப் போற்றினர். நாயன்மார்கள் திருக்கோயில்களில் பாடிய திருப்பதிகங்களின் பயனாய் அவை பாடல் பெற்ற தலங்களாகச் சிறப்படைந்தன.
- தஞ்சைகோயிலில் இசைப்பணிபுரிந்த கலைஞர்கள், சில கோயில்களில் வேதம் ஓதுவதற்கு வக்காணிப்பு மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. ஓதுவார்கள் பிடாரர்கள் நியமிக்கப்பட்டனர்.திருப்பதியம் பாடுவதற்கு 9ம் நூற்றாண்டு காலம் முதல் அறக்கட்டளைகள் ஏற்பட்டன. 11ம் நூற்றாண்டில் பெருவழக்காயின.
- இவற்றினூடாக இந்துப்பண்பாட்டு வளர்ச்சியில் திருக்கோயில்களில் இசைக்கலை மேன்மையடைந்ததை அறியலாம்.
- நாயக்கர்காலத்தில் இசைவடிவங்கள்,கீர்த்தனைகள்,இசைத்தூண்கள்.
- இசைக்கலை ஆலயங்களில் விருத்தியடைய மன்னர் பங்களிப்பு நல்கினர்.
- ஆலயங்களில் பஞ்சபுராணம் ஓதும் மரபு ,திருமுறைபாராயணம்.
- வைணவ மரபில் இசை சிறப்பிடம் பெற்றது. கதாகாலட்சேபம்.
- ஆலயவழிபாட்டுல் இசை சிறந்த உபசாரமாக சிறப்படைந்தது.
- இசைக்கச்சேரிகள்-மகோற்சவகாலங்களில் இசை சிறப்புப்பெற்றது.

**(10 புள்ளிகள் )**

**ஆ). கட்டடக்கலை**

- கலை என்பதன் பொருள் விளக்கம்
- நுண்கலைகளுள் ஒன்றாக அமைவது
- வரலாற்றுக் கால அடிப்படையில் சிறப்புப் பெற்றுக் காணப்பட்டமை
- ஆலயங்களை மையமாகக் கொண்டு இக்கலை வளர்ச்சியடைந்து காணப்பட்டது.
- சிறப்பாகப் பல்லவ, சோழ, நாயக்கர் காலப் பரப்பை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சி பெற்றமை

- பல்லவ மன்னர்களால் அமைக்கப்பட்ட பல்வேறு வகைப்பட்ட ஆலயங்கள், அக்கால கட்டடக்கலை வளர்ச்சியைக் காட்டுவன.

- குடைதளிகள், மலைதளிகள், கட்டுத்தளிகள் என்பன குறிப்பிடத்தக்கன.

- மண்டகப்பட்டு, மகேந்திரவாடியம், மாமண்டூர், வல்லம், பல்லாவரம் போன்ற குடைவரைக் கோயில்கள் சிறந்த சான்றுகளாகும்.

- குடைவரைக் கோயில்கள் கருவறை, அர்த்தமண்டபம், முகப்பு மண்டபம் என்பவற்றையும் பிரதான வாயிலையும் கொண்டுள்ளன.

- இறை வடிவங்கள் சுதை, மரம் என்பவற்றால் ஆக்கப்பட்டன எனக் கருதுவர்.

- பல்லவர் கால கட்டடக்கலையின் 2ஆம் கட்ட வளர்ச்சியைக் காட்டுபவை மலைதளிகளாகும்.

- மலைதளிகளை ரதக்கோயில்கள், பாறைக்கோயில்கள், செதுக்குத்தளிகள் எனவும் கூறுவர்.

- ரதக்கோயில்களின் சிறப்பு

- மாமல்லபுர மலைதளிகள் மகாபாரதக் கதாபாத்திரங்களின் பெயர்களாலும் அழைக்கப்படுகின்றன.

- கட்டுத்தளிக் கலைமரபு இராஜசிம்ம பல்லவ மன்னனது கலைமரபாகும்.

- மாமல்லபுர கடற்கரைக் கோயில், காஞ்சி கைலாசநாதர் கோயில், வைகுந்தப் பெருமாள் ஆலயம் என்பன குறிப்பிடத்தக்கன.

- காஞ்சி கைலாசநாதர் கோயில் கலை வனப்புடையது. விமானம், மண்டபம், பரிவாரத் தேவர் கோட்டம், சுற்றாலை, கோபுரம், பிரகாரம் ஆகிய யாவும் அமைக்கப்பட்டுள்ளன.

- பொருளாதார வளம் சோழர் கால கட்டடக்கலையில் பிரதிபலிக்கப்பட்டமை.

- சோழ மன்னர்கள் போரில் பெற்ற வெற்றிகளுக்காகவும், மக்களின் ஆன்மீக தேவையை நிறைவேற்றுவதற்காகவும் பல கோயில்களை அமைத்தனர்.

- சோழர் கால கட்டடக்கலை மூன்று பாணிக்கு உட்பட்டு காணப்பட்டமை
  முற்கால சோழர் பாணி
  இடைக்கால சோழர் பாணி
  பிற்கால சோழர் பாணி

- இக்காலத்தில் சிறப்பிக்கப்பட்ட மன்னர்கள் - விஜயாலய சோழன், பராந்தக சோழன், ராஜராஜ சோழன், ராஜேந்திர சோழன் முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

- விஜயாலய சோழேஸ்வரம், புதுக்கோட்டை மூவர் கோயில் –முற்கால சோழர் கோயில்கள்
- தஞ்சைப் பெருங்கோயில், கங்கை கொண்ட சோழேஸ்வரம் – இடைக்காலச் சோழர் கோயில்கள்
- சிதம்பரம், ஜராவதேஸ்வரம், திரிபுவனம் – பிற்காலச் சோழர் கோயில்கள்
- ஆகம முறைப்படி கட்டட அமைப்பு
- தஞ்சைக் கோயிலின் பிரதான பகுதி பிரமிட் வடிவில் அமைந்த அதன் விமானம் ஆகும்.
- விமானம் 216 அடி உயரம். 15 அடுக்குகளைக் கொண்டது.
- கேரளாந்தகன் வாயில், இராஜராஜன் வாயில், திருவணுக்கன் வாயில் என்பன குறிப்பிடத்தக்கன.
- கங்கை கொண்ட சோழேஸ்வரம் 567 அடி நீளமும் 318 அடி அகலமும் கொண்ட வளாகத்தினுள் அமைந்–துள்ளது.
- இதன் விமானம் வில் வளைவாகக் காட்சியளிக்கிறது.
- பிற்கால சோழ மன்னர்களில் விக்கிரம சோழன் போன்ற அரசர்கள் சிதம்பரத்தில் நூற்றுக்கால் மண்டபம், ஆயிரங்கால் மண்டபம் போன்றவற்றை நிறுவியமை.
- திருச்சுற்று மாளிகை அமைப்பு
- நாயக்கர்காலக் கட்டடங்களில் ஆயிரங்கால் மண்டப அமைப்பு
- மதுரை மீனாட்சி அம்மன், ஸ்ரீரங்கம் ஆலய கட்டட அமைப்புக்கள்
- தூண்களில் பொருத்தப்பட்ட உருவ அமைப்புக்கள்
- அவதாரச் சிறப்பைச் சித்தரிக்கும் வடிவங்கள்
- மகர தோரணம், கும்ப வளையங்கள் கட்டட அமைப்பின் சிறப்பு.

**(10 புள்ளிகள்)**

**(மொத்தம் 10+10 = 20 புள்ளிகள் )**

**05. இந்துக்களின் சமய பண்பாட்டு வாழ்வினை வளம்படுத்துவதில் பகவத்கீதை பெறும் முக்கியத்துவத்தினை மேல்வரும் தலைப்புக்களில் பரிசீலிக்குக**

**(அ) பகவத்கீதையின் உருவாக்கம்**

**(ஆ) பகவத்கீதையின் சிறப்பு**

**(அ) பகவத்கீதையின் உருவாக்கம்**

- மகாபாரதத்தின் பீஷ்ம பருவத்தின் 25ஆவது அத்தியாயத்திலிருந்து 42வது அத்தியாயம் வரையில் பகவத்கீதை உள்ளது. பிரஸ்தான திரயத்தில் ஒன்றெனப் போற்றப்படுவது. கிருஷ்ண பரமாத்மாவினால் அர்ச்சுனனுக்கு உபதேசிக்கப்பட்டதாக இது சிறப்புப் பெறுகின்றது.

- உபநிடத மகாவாக்கியமாகிய தத்துவமஸி என்பதற்கான ஒரு விளக்க நூலாகவும் கொள்ளப்படுகின்றது. அர்ச்சுன விஷாத யோகத்துடன் ஆரம்பிக்கின்ற கீதை 18 அத்தியாயங்களையும் 700 சுலோகங்களைக் கொண்டதாகவும் அமையப் பெற்றுள்ளது.

- பதினெட்டு அத்தியாயங்களும் 18 யோகங்களின் பெயரால் குறிப்பிடப்படுகின்றன.

- 18 யோகங்களும் கர்ம யோகம், பக்தி யோகம், ஞான யோகம் என்னும் மூவகை யோகங்களினூடாக மெய்யியற் சிந்தனைகளையும் ஆன்ம ஈடேற்றத்திற்கான வழிகளையும் விபரிக்கின்றன.

- குருஷேத்திர போர்க்களத்தில் கீதை பகவான் கிருஷ்ணனால் அர்ச்சுனனுக்கு உபதேசம் செய்யப்பட்ட பெருமையுடையது.

**(10 புள்ளிகள்)**

**ஆ. பகவத்கீதையின் சிறப்பு**

- பகவத்கீதை இந்தியாவில் தோற்றம் பெற்றவிடத்தும் உலகளாவிய பெருமைக்குரிய நூலாகப் போற்றப்படுகின்றது.

- இந்து தத்துவ சிந்தனைகளைத் தெளிவாக விளக்குவதனால் உபநிடதங்களைப் பசு எனவும் பகவத்கீதையைப் பால் எனவும் உருவகப்படுத்தும் மரபு உள்ளது.

- உபநிடதங்களுக்கு ஒப்பாகத் தோன்றிய ஓர் இலக்கிய வடிவம் பகவத்கீதை எனக் கொள்ளும் மரபுண்டு.

- பகவத்கீதை பரம்பொருள், ஆன்மா, கன்மம் மறுபிறப்பு, உலகம், அறம், விடுதலை, பக்தி தொடர்பான மெய்யியற் சிந்தனைகளைக் கொண்டது.

- உபநிடதங்கள் பிரமத்திற்கு அளித்துள்ள இயல்புகளை பகவத்கீதை விஷ்ணுவுக்கு அளிக்கின்றது. விஷ்ணுவை பிரமமாகக் கூறுவதுடன் நிர்க்குண சகுண நிலைகளிலும் விளங்குபவராகக் குறிப்பிடுகின்றது.

- பகவத்கீதையில் ஸ்ரீகிருஷ்ணர் அனைத்தையும் கடந்த நிர்க்குணமாகவும் அனைத்திலும் கலந்த சகுணமாகவும் விளங்கும் பரம்பொருள் எனக் குறிப்பிடப்படுகின்றார். தனது மேலான உயர்வான இயல்பை அறிவாயாக எனத் தன் இயல்பை உபதேசிக்கின்றார்.

- வைணவத்தில் முக்கியத்துவம் பெறும் அவதாரக் கோட்பாடு தொடர்பான சிந்தனைகளையும் கீதை கூறுகின்றது. "நல்லோரைக் காக்கவும் தீயோரை அழிக்கவும் அறத்தை நன்கு நிலைபெறச் செய்யவும் யுகங்கள் தோறும் நான் அவதரிக்கின்றேன்" என தன்னை வெளிப்படுத்துகின்றார்.

- "ஆத்மா ஒரு போதும் பிறப்பதும் இல்லை: இறப்பதும் இல்லை: முன்பு இல்லாதிருந்து தோன்றியதுமல்ல : என்றும் ஆத்மா அழியாத உண்மைப் பொருள்" எனக் கீதை உணர்த்தும்.

- பிரபஞ்சத்தின் தோற்றம், ஒடுக்கம், பிரபஞ்ச உற்பத்தியின் மூலாதாரம் என்பன போன்ற சிந்தனைகளும் இடம் பெறுகின்றன.

- விஷ்ணுவே பிரபஞ்சப் படைப்பின் முதற்காரணம் எனக் கீதை கூறும். பிரபஞ்சப் பொருட்கள் யாவற்றிலும் நிறைந்துள்ள அந்தர்யாமித்துவம் எனும் வியாபக நிலை பற்றியும் கீதை கூறுகின்றது.

- "கடமையைச் செய் பலனை எதிர்பாராதே" என கர்ம சந்நியாச யோகத்தில் உபதேசிக்கின்றார் கிருஷ்ணர்.

**(10 புள்ளிகள்)**

**(மொத்தம் 10+10 = 20 புள்ளிகள் )**

**6. வேதாந்த தத்துவ வளர்ச்சியில் மத்துவரின் துவைத வேதாந்தத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை மேல்வருவனவற்றைக் கருத்திற் கொண்டு விளக்குக.**

**அறிமுகம்**

வேதாந்தக் கோட்பாடுகளில் துவைத வேதாந்தமும் ஒன்றாகும். இது மத்துவரினால் உருவாக்கப்பட்டது. மத்துவர் 13ஆம் நூற்றாண்டு காலப் பகுதியைச் சேர்ந்தவர். இவர் பூரணப்பிரக்ஞர், ஆனந்ததீர்த்தர் முதலிய பெயர்களினாலும் அழைக்கப்படுகிறார்.

**அ. தோற்றம் பெற்றமைக்கான பின்னணி**

வைணவ மதத்தைச் சேர்ந்தவரான மத்துவர் புராணங்களிலும் ஈடுபாடு கொண்டவர். பாகவத புராண விளக்க நூல் எழுதியமை, சர்வ மூலம் எனும் தொகைநூல் எழுதியமை குறிப்பிடத்தக்கன. இவை எல்லாவற்றுக்கும் மேலாக இருக்கு வேதத்தின் முதல் நாற்பது மந்திரங்களுக்கு விரிவுரைகள் எழுதியதுடன், வேதாந்த சூத்திரம், தச உபநிடதங்கள், பகவத்கீதைக்கு உரை எழுதிய ஒரு பின்னணியில் துவைத வேதாந்தக் கோட்பாட்டை உருவாக்கினார். சங்கரர், இராமானுஜரது கோட்பாடுகளை உள்வாங்கி துவைதக் கோட்பாட்டை நிறுவினார்.

**(10 புள்ளிகள்)**

**ஆ. துவைதக் கோட்பாட்டின் முக்கியத்துவம்**

- துவைதம் என்ற சொல் இரண்டு என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

- இரண்டு எனப் பேசப்படுபவை இறைவனும் ஆன்மாவும் ஆகும்.

- இவை இரண்டும் இரண்டு என்ற நிலையினின்றும் நீங்கி ஒன்று என்ற நிலையை அடைவதில்லை. எப்போதும் இரண்டும் இரண்டுதான். எனவே ஆன்மாக்களும் தம் தனி இயல்பை இழந்து விடுவதில்லை என்பது முக்கியத்துவம் பெறுகிறது.

- மத்துவர் பிரஸ்தானதிரயங்களுடன் இதிகாசங்கள், வைணவ ஆகமங்கள், வைணவ புராணங்கள் போன்றவற்றையும் பிரமாண நூல்களாகக் கொள்கின்றமை அவரது தத்துவம் ஏனைய தத்துவங்களினின்றும் வேறுபடுவதற்கு காரணமாயிற்று.

- இவர் சங்கரர் போலன்றிப் பன்மைவாதி. ஈஸ்வரன், சீவன், சடம் என்றமுப்பொருளுண்மையை ஏற்றுக் கொண்டதுடன் முப்பொருளுக்குமிடையே ஐவகைப் பேதங்களையும் எடுத்துரைக்கிறார். பேதங்களும் நிரந்தரமானவை என்பது அவரது கருத்து.

- ஐவகைப் பேதங்கள்
  சீவ ஈஸ்வர பேதம் – சீவனுக்கும் ஈஸ்வரனுக்கும் இடையே உள்ளது
  சட ஈஸ்வர பேதம் – சடத்துக்கும் ஈஸ்வரனுக்கும் உள்ள வேறுபாடு
  சீவ சட பேதம் – சீவனுக்கும் சடத்துக்கும் உள்ள வேறுபாடு
  சீவ பரஸ்பர பேதம் – ஒரு சீவனுக்கும் இன்னொரு சீவனுக்கும் இடையே உள்ள வேறுபாடு
  சட பரஸ்பர பேதம் – ஒரு சடத்துக்கும் இன்னொரு சடத்துக்கும் இடையே உள்ள வேறுபாடு

- இவ்வாறு முப்பொருளுண்மை, ஐவகைப் பேதங்களை எடுத்துக் கூறிய மத்துவர் இறைவன் ஒருவனே சுதந்திரமான உள்பொருள் என்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார். மற்றைய உள்பொருட்களான ஆன்மாக்களும் சடப்பொருட்களும் சுதந்திரமற்றவை என்பது மத்துவரின் கருத்தாகும்.

**(10 புள்ளிகள்)**

**(மொத்தம் 10+10 = 20 புள்ளிகள் )**

**07. விஜய நகர நாயக்கர் காலத்தில் இந்துப் பண்பாட்டில் ஏற்பட்ட மாற்றங்களை மேல் வருவனவற்றைக் கருத்திற் கொண்டு பரிசீலிக்குக.**

**(அ) அக்காலச் சூழ்நிலை**

**(ஆ) சமய நிலை**

**(அ) அக்காலச் சூழ்நிலை**

- தென்னிந்தியாவில் கர்நாடக மாநிலத்தில் 1336இல் விஜய நகரப் பேரரசு நிறுவப்பட்டது.

- அவர்கள் காவிரி ,வைகை, தாமிரபரணிப் பிரதேசங்களையும் கைப்பற்றினர்.

- விஜய நகர அரசர்கள் தமிழகத்தில் ஆதிக்கம் செலுத்த முன்பு இஸ்லாமியர் ஆட்சி தமிழகத்தில் பேராதிக்க நிலையில் விளங்கியது.
- முதலாம் புக்கன் என்பவன் விஜய நகரப் பேரரசனாக முடிசூடித் தமிழகத்தை ஆட்சி செய்தான். விஜய நகர அரசர்களில் தமிழ்நாட்டை ஆண்டவர்களை மண்டலிதர் எனக்கூறுவது மரபாகியது. மண்டலிதர் என்பவர் மண்டல ஆட்சியில் ஈடுபட்டவர்களாவர். விஜய நகர ஆதிக்கத்தின் கீழ் தமிழ் நாட்டை ஆண்டவர்கள் மகா மண்டல ஈஸ்வரன் என அழைக்கப்பட்டனர்.
- இத்தகைய விஜய நகர ஆட்சி தலைக்கோட்டைப் போரைத் தொடர்ந்து வலுவிழந்தது. அதனைத் தொடர்ந்து விஜய நகர நாயக்க அரசர் மதுரை, தஞ்சை , செஞ்சி , திருமலை ஆகிய இடங்களில் ஆட்சி செய்து தம்மை இந்துமன்னர்களாக மாற்றிக் கொண்டனர்.
- விஜய நகர அரசர்களில் முதன்மையானவர் கிருஷ்ண தேவராயர் (1509/1529) நீதியான ஆட்சி அவன் காலத்தில் இடம் பெற்றதை வெளிநாட்டறிஞர் குறிப்பிடுவர். தலைக்கோட்டைப் போரில் இராமராயர் என்ற அரசன் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து விஜய நகர ஆதிக்கம் சிதைவுற்றது.
- விஜய நகர அரசர்கள் வைணவத்திற்கும் பங்களிப்புச் செய்தனர்.
- இஸ்லாமியர்கள் இந்துப்பண்பாட்டை அழித்தனர். இந்துக்களை மதம் மாற்றினர். கோயில்களையும் படிமங்களையும் சிதைத்தனர். அத்துடன் இந்துக்களை இழிவாகக் கருதும் நிலையை ஏற்படுத்தினர். இவ்வேளையில் இவற்றையெல்லாம் எதிர்க்கத் தோன்றியதே விஜய நகர அரசாகும்.
- விஜய நகர நாயக்க மன்னராட்சியில் இந்துப் பண்பாடு மறுமலர்ச்சியடைந்தது.

**(10 புள்ளிகள் )**

**(ஆ) சமய நிலை**

- விஜய நகர அரசரில் ஒருவராகிய கரிகரர், காளஹஸ்தி , சிதம்பரம், திருப்பதி திருவரங்கம் முதலிய கோயில்களில் திருப்பணி செய்தார். இவற்றினூடாக இவ்வரசனின் சைவ வைணவ பணிபற்றி அறியலாம்.
- விஜய நகர ஆரம்பகால அரசர்கள் சைவ சமயத்தவர் . அரசர்கள் சங்கரரின் சிருங்கேரி மடத்திற்குக் கூடுதல் மானியங்கள் வழங்கினர்.
- சாளுவநரசிம்மனுக்குப் பின்பு ஆட்சி செய்த அரசர்கள் வைணவ அரசராவர். அவர்கள் சைவ வைணவ ஆலயங்களுக்கு வேறுபாடின்றித் தானங்களை வழங்கினர்.
- சித்தாந்த சைவம் , வீரசைவம் ,காஷ்மீர சைவம் என்பவற்றின் வளர்ச்சி காணப்பட்டது.
- விருபாட்சகர் கோயில் ,விருபாட்சம் பொறித்தல் என்பன முக்கியமானவை.
- சைவசமய நெறியில் விருபாட்சகர் வழிபாடு பிரதான இடத்தைப் பெற்றது. வைணவம் பற்றித் தெலுங்கு , கன்னட மொழிப் பாடல்கள் எழுந்தன

- கிருஷ்ண தேவராயர் காலத்தில் தெலுங்கு இலக்கியம் முதன்மை பெற்றது . அவரே விஷ்ணுசித்தீயம் என்ற நூலை எழுதியவர்.

- சைவசமயத்தில் காளத்திமகாத்மியம் கிருஷ்ண தேவராயர் காலத்தில் எழுதப்பட்டது.

- வைணவம் வடகலை தென்கலை என்ற பிரிவுகளில் விரிவடைந்தது.

- திருவரங்கத்தில் வாழ்ந்த மத்துவர் வேதாந்தத்தைப் போதித்தார் .

- அருணகிரிநாதர் பாடல்கள் முருகவழிபாட்டை எடுத்துக்காட்டுவன.

- காளாமுகர், பாசுபதர் முதலிய சைவசமயப் பிரிவினர்களும் காணப்பட்டனர்.

- இந்துப்பண்பாடு விஜயநகர நாயகர் காலத்தில் பல்வேறு மாற்றங்களைப் பெற அரசரது பங்களிப்பு பெரிதும் உதவியது. வடமொழி , தமிழ் மொழி இலக்கியங்கள் எழுச்சி பெற்றன. நான்கு வேதங்களுக்கான சாயனர் உரை, ஸ்வர தீட்சிதரின் இராமாயண உரை, சானாவதிம்மரின் கிருஷ்ண சந்தம் என்ற மகாபாரத உரை போன்றவை குறிப்பிடற்பாலன. சைவ இலக்கிய வளர்ச்சியில் சித்தாந்த இலக்கியம், தலபுராணம், சித்தாந்தப் பாடல்கள், உரை நூல்கள் வளர்ச்சி கண்டன.

- தலபுராண வளர்ச்சியில் தமிழில் 40 சைவ சமய புராணங்கள் எழுந்தன. உமாபதி சிவம் சிதம்பரக் கோயில் பற்றிப்பாடிய கோயிற்புராணம் குறிப்பிடத்தக்கது.

- ஆகம உரைகள் , தோத்திர பாடல்கள் எழுச்சி பெற்றன . கலை இலக்கியங்களும் குறிப்பிடற்பாலன.

- நாயக்கர் காலப்பகுதியில் வைணவ நெறிக்கு மன்னர் பணி செய்தனர். சைவ ஆதீனங்களும் சமயப்பணியாற்றின.

- அம்மன், முருகன், விநாயகர் வழிபாடுகள் சிறப்படைந்தன.

- விஜய நகர கால கலைமரபில் கோயில் வளர்ச்சி குறிப்பிடத்தக்கது. விருபாட்சகர் கோயில், விட்டல சுவாமி கோயில் என்பன கிருஷ்ண தேவராயர் காலக் கோயில்களாகும். இவற்றில் இராமாயண கலைச்சிற்பம், இராஜகோபுரம், கல்யாண மண்டபம், ஆயிரங்கால் மண்டபம் ஆகியவை இடம்பெற்றன.

- நாயக்கர் காலத்தில் மதுரைமீனாட்சியம்மன் கோவில் சிறப்புடையது. இந்துக் கோயில்களும் விழாக்களும் வளர்ச்சியடைந்தன. மதுரை , சிதம்பரம், திருவாரூர் கோயில்களில் பௌர்ணமி சித்திரை விழா, தெப்பத் திருவிழா, திருவாதிரைத்திருவிழா போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

- இவ்வகையில் விஜய நகர நாயக்கர் காலத்தில் இந்துப் பண்பாடு பல்வேறு நிலைகளில் வளர்ச்சியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

**(10 புள்ளிகள் )**

**(மொத்தம் 10 +10 = 20 புள்ளிகள் )**

**08. இந்து அறிவியல் வளர்ச்சியில் வானியலின் சிறப்பம்சங்களை மேல்வருவனவற்றைக் கருத்திற் கொண்டு ஆராய்க .**

**(அ) வானியற் கோட்பாடுகள்**
**(ஆ) பண்டைய இந்தியரின் வானியற்பணிகள்**

**(அ) வானியற் கோட்பாடுகள்**

- பண்டைய வானியற் கோட்பாடுகளில்
  1- பிதாமஹ கோட்பாடு - வருடம் 365 நாட்களைக் கொண்டது.

  2- புளிஷ கோட்பாடு - நீள்வட்டப்பாதை பற்றிய விபரம் , நட்சத்திரங்களின் தோற்றம்

  3- சூரியக் கோட்பாடு - கிரகங்களின் அசைவுக் கணிப்பு

- சந்திரன் நிலையான நட்சத்திரங்களைச் சுற்றிவர 27 சந்திர நாட்களும் 7 3/4 மணி நேரமும் எடுக்கிறது. அதனால் வானம் 27 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு நாளும் சந்திரன் சுற்றி வரும் போது சூரியனில் வெளித்தோற்றப் பாதையிலுள்ள எந்த நட்சத்திரக் கூட்டத்தை அணுகிச் செல்கிறதோ அதன் பெயரால் அவை அழைக்கப்பட்டன.

- சந்திரமாதம் நட்சத்திரங்களைக் கொண்டு அளவிடப்பட்டது. சந்திரனுக்கு மாசத்தை உருவாக்குபவன் என்ற கருத்தில் ' மாசக்கிருத்தா' என்ற பெயர் வழங்கப்பட்டது .

- இந்திய வானியலாளர் தம் வானியல் அறிவை கணித அறிவோடு விருத்தி செய்து அராபியரூடாக ஐரோப்பியர்களுக்கு நல்கினர் எனவும் அறியப்படுகின்றது .

**(10 புள்ளிகள்)**

**(ஆ) பண்டைய இந்தியரின் வானியற்பணிகள்**

- முழுமையான ஒன்றைப்பற்றி பகுத்து ஆராய்வதும் முழுமையற்றுக் காணப்படும் ஒன்றின் படிமுறையான தொடர்பையும் ஒழுங்கையும் ஆராய்தல் அறிவியல் சார்ந்தவையாகும்.

- இந்து அறிவியல் துறைகள் ஒவ்வொன்றும் இந்துக்களின் வாழ்வியலோடு தொடர்புபட்டதாகவே விளங்குகின்றன.

- இந்து அறிவியல் என்பதனுள் எண்ணற்ற துறைகள் அடங்கும். அவற்றுள் இந்து வானியல் குறிப்பிடத்தக்கது.

- வேதகாலத்தில் மண், விண், இடைவெளி பற்றி ஆராயப்பட்டுள்ளது. சூரியர், சந்திரர் பற்றி அறியப்பட்டுள்ளன. நாள், சந்திரமாதம் சூரிய வருடம் பற்றிக் குறிப்புக்கள் உண்டு. பிராமணங்களில் சூரியனது போக்கு பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது .

- வேதாங்கங்களில் சோதிடம் ஒன்றாகும். சந்திரமாதம் சூரிய வருடம் பற்றிக் கூறப்படுகின்றது.

- அதர்வ வேதத்தில் சோதிடத்தின் தொடக்கமுள்ளது.

- மகாபாரதத்தில் யுகங்கள், மாதங்கள் , ருதுக்கள் பற்றிய குறிப்புக்கள் உள்ளன.

- இவ்வாறு தொன்மையான இலக்கியங்கள் மூலம் வளம் பெற்ற வானியற் சிந்தனைகள் இந்திய அறிவியல் அறிஞர்களின் பணிகளால் மேலும் வளம் பெறலாயிற்று இத்தகைய அறிஞர் வரிசையில் பலர் தமது கோட்பாடுகளை தமது நூற்பணிகள் ஊடாக வளம்படுத்தினர். கி.பி 5 ஆம் நூற்றாண்டளவில் ஆரியபட்டர் எனும் இந்து வானியலாளர் புவியானது சூரியனைச் சுற்றி வருவதாகவும் அது தன் அச்சில் சூழல்கின்றதுதெனவும் கருத்து வெளியிட்டார்.

- இந்து வானியலாளர் ஓராண்டின் கால அளவு மற்றும் கிரகணங்களைத் திருத்தமாக எதிர்வு கூறுதல், அவற்றின் உண்மைக் காரணம் ஆகியவற்றை அறிந்திருந்தனர் .

- 1ஆம் ஆரியபட்டர், வராகமிகிரர், பிரம்மகுப்தர் ஆகிய மூவரும் புராதன இந்திய வானியற் புலமை மரபின் முப்பெரும் பிதாமகர்கள் எனப்பட்டனர் .

- இந்திய வானியல் பற்றிய நூல்களில் ஆரிய பட்டர் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன.

- ஆரிய பட்டரது சித்தாந்தம் (1) கீதிகா – வானியல் அட்டவணை (2) கணிதம் (3) காலக்கிரியா பாடம் (கால அளவு) (4) கோளம் என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

- ஆரிய பட்டர் , புளிசர் , வாசிஷ்டர் , லாடதேவர் ஆகியோர் உலகம் உருண்டையாக இருப்பதனால் ஓரிடத்தில் பகலும் ஓரிடத்தில் இரவும் நிலவுவதாகக் குறிப்பிட்டனர்.

- புளிசரால் புளிச சித்தாந்தம் என்ற நூல் தொகுக்கப்பட்டது.

- பிரமகுப்தர் குப்தர் காலத்தில் (கி.பி 598) வாழ்ந்த சிறந்த வானியலாளராகக் கருதப்படுகின்றார் . பிரம்மஸ்புட சித்தாந்தம் இவரது வானியல் தொடர்பான நூலாகும்.

- கி.பி 6 ஆம் நூற்றாண்டளவில் உஜ்ஜயினியில் வாழ்ந்த வானியலாளர் வராகமிகிரர் சோதிடத்தில் வல்ல-வர். வானியல் வரலாற்றுக்குப் பயன்படும் 'பஞ்ச சித்தாந்திகை' எனும் தொகுப்பு நூல் இவருடையதாகும் .

- இந்து வானியலாளர் சூரிய உதயம் , அஸ்தமனம் கொண்டு நேரத்தைக் கணித்தனர்.

- இந்து வானியலாளர் சூரியனது பரிமாணம் , சந்திரனது பரிமாணம் , அவற்றின் தூரம் கிரகணங்கள் பற்றியும் வானியல் கருவிகள் பற்றியும் அறிந்து விளக்கியுள்ளமை அவர்களது பணிகளில் சிறப்பம்சமாகும் .

**(10 புள்ளிகள்)**

**(மொத்தம் 10+10 = 20 புள்ளிகள் )**